# 7 அழ. வள்ளியப்பா பாடல்கள்

## புதுவகைப் பாடல்

தா தா தா தா தா தா தா தா தா தா க்குத் தண்ணீர் தாரான்
ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆக்கும் உதவான் கொள்ளை
லா லா லா லா லா லா லா லா லா லாக்குப் பொருளை விற்பான்
பா பா பா பா பா பா பா பா பா பா பாக்கே ஆளாவானே.

## மொழித்திறப் பாடல்

சந்தைக்குப் போனேன் சந்தைக்குப் போனேன்
சாம்பல் பூசணி வாங்கிடவே
சண்டைக்குப் போனேன் சண்டைக்குப் போனேன்
தாய்த்திரு நாட்டைக் காத்திடவே

வெல்லத்தைப் பார்த்தேன் வெல்லத்தைப் பார்த்தேன்
வேலுச் சாமி கடையினிலே
வெள்ளத்தைப் பார்த்தேன் வெள்ளத்தைப் பார்த்தேன்
விடாது பெய்த மழையினிலே

தவளையைப் பிடித்தேன் தவளையைப் பிடித்தேன்
தரையில் தத்திச் செல்கையிலே
தவலையைப் பிடித்தேன் தவலையைப் பிடித்தேன்
தலையில் தூக்கி வருகையிலே

கொல்லையில் கிடைத்தது கொல்லையில் கிடைத்தது
குலையுடன் எனக்கு மாம்பழமே
கொள்ளையில் கிடைத்தது கொள்ளையில் கிடைத்தது
கொடியவனுக்குத் தண்டனையே

◆ அரும்பதங்கள்

சந்தை - சமையலுக்குத் தேவையான பொருட்கள் நிறைந்த இடம் (காய்கறி, மீன், பழங்கள், கீரைகள்)
வெல்லம் - சீனி
வெள்ளம் - மழைநீர் பெருக்கெடுத்து ஓடுவது
தவலை - குடத்தைக் குறிக்கும்
கொல்லை - வீட்டின் பின்புறம்
கொள்ளை - ஒருவனின் உடைமைகளை அபகரித்தல்

## கிரகித்தல் பயிற்சி

பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளி நிரப்புக.

1. சந்தைக்குப் போனேன் ..................... ...................... வாங்கிடவே.
2. தாய்த்திரு நாட்டைக் காத்திடவே ..................... போனேன்.
3. கொல்லையில் கிடைத்தது .......................
4. கொடிவனுக்குக் கிடைத்தது .......................

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள்

1. மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து பாடலை ஒலி வேறுபாட்டுடன் பாடுவதற்கு ஏற்ற செயற்பாட்டைத் திட்டமிடுக.
2. பாடலில் இடம்பெறும் சொற்களின் பொருளைத் தெளிவாகக் கூறுவதற்கு மாணவர்களை வழிப்படுத்துக.
3. பாடலை மனனம் செய்து பாடுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்க.

**ஆக்கத்திறன் செயற்பாடு**

இப்பாடல் போன்று வேறு பாடல் ஒன்றை உருவாக்க மாணவர்களை வழிப்படுத்துக.

**மதிப்பீடு**

தொடர்பு படுத்துக.

| | |
|---|---|
| 1. வெல்லம் | மழை |
| 2. வெள்ளம் | தலை |
| 3. தவளை | கடை |
| 4. தவலை | தரை |

**மேலதிகச் செயற்பாடு**

இவ்வாறான சிறுவர் பாடல்களைத் தேடித் தொகுத்து, பாடுவதற்கு ஏற்ற வேலைத்திட்டம் ஒன்றை மேற்கொள்க.

# அணிற் பாடல்



அழகு மிக்க பிள்ளையே
அங்கும் இங்கும் ஓடியே
பழங்கள் தேடிப் பிடிக்கிறாய்
பையப் பையக் கொறிக்கிறாய்

வளைத்து வாலைத் தூக்குவாய்
மரத்தின் உச்சி ஏறுவாய்
கிளைகள் தோறும் தாவுவாய்
கெடுதி ஏதும் செய்திடாய்

மூன்று கோடு முதுகிலே
முன்பு ராமர் தந்ததோ?
நான்கு முகத்துப் பிரமனால்
நன்கு படைக்கப்பட்டதோ?

கேட்ட கேள்வி கேட்டதும்
கீச்சுக் கீச்சு என்கிறாய்
ஓட்டம் பிடிக்கப் பார்க்கிறாய்
ஒளிந்து கொள்ள நினைக்கிறாய்

பிள்ளை என்றே உன்னை நான்
பிரியமாக அழைக்கிறேன்
கிள்ளிக் கிள்ளிப் பழங்களைக்
கீழே எனக்கும் போடுவாய்

## கிரகித்தல் பயிற்சி

1. அழகு மிக்க பிள்ளை என அழைப்பது யாரை?
2. அணில் பிள்ளையின் செயற்பாடுகளைக் குறிப்பிடுக.
3. அணிலின் முதுகினில் உள்ள கோடு யார் தந்ததாகக் கூறப்படுகின்றது?
4. படைத்தல் கடவுளாகக் கூறப்படுபவர் யார்?
5. அணில் எவ்வாறு கத்தும்?

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள்

1. மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து பாடலை இரசனையுடன் பாடுவதற்கான செயற்பாட்டைத் திட்டமிடுக.
2. மாணவர்களைக் கொண்டு பாடலை அபிநயத்துடன் பாடச்செய்க.
3. பாடலை மனனம் செய்வதற்கு வழிப்படுத்துக.
4. பிராணிகளின் பாடல்களை ஒப்படையாகத் தொகுக்கவும் பாடவும் செயற்பாட்டினை மேற்கொள்க.
5. இவ்வாறான பாடலை ஆக்குவதற்கு மாணவர்களை வழிப்படுத்துக.